மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 3 கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். கடைசியாக கேட்ட கேள்விக்கு இல்லை என்பதுதான் என்னுடைய பதில். ஜெனரேட்டர் பற்றி கேட்டார்கள். ஜெனரேட்டர் களைப் பொருத்துவதற்கான எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. விரைவில் பொருத்தப்படும். அதற்கு முன்பாக முதல் கேள்வியாகா கேட்டதற்கு, 2 லட்சம் ரூபாய் ரோட்டரி சங்கத் தினர் நன்கொடையாகக் கொடுப்பார்களேயானால், அதை விரைவில் விஸ்தரிக்கஅரசு தயாராக இருக்கிறது. கொடுக்கவில்லை என்றாலும், அதற்கான பணிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள் நன்கொடை கொடுப்பார்களேயானால், அந்தப் பணிகள் விரைவில் முடிவுற வாய்ப்பு இருக்கும்.

திரு. ஏ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் இருக்கும் தாராபுரம் ஆரம்பச் சுகாதார மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக ஆக்கவேண்டும் என்று பலமுறை விண்ணப்பங் கள் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரைவில் அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கும்பகோணம் மருத்துவமனையைப் பற்றியது. இருந்தாலும் கேள்வியை எழுப்ப அனுமதித்துவிட்ட காரணத்தால்..... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வியை அனுமதிக்க வில்லை. இதற்குப் பதிலளிக்க வேண்டாம்.

வினா எண்கள் 137, 138 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறையில் நிரப்பப்படாமலுள்ள பதவிகள்.

*வினா எண். 139— திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் உதவி இயக்குநர், துணை இயக்குநர் பதவிகளுக்கு எத்தனை இடங்கள் நிரப்பப் படாமலுள்ளன?

(ஆ) அவை எப்பொழுது நிரப்பப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) உதவி இயக்குநர் பதவியில் ஒரு இடமும், துணை இயக்குநர் பதவியில் ஒரு இடமும் நிரப்பப்படாமலுள்ளன.

(ஆ) மாதவரம் பால்பண்ணையில் உதவி இயக்குநர் பதவி என்ற பதவி இருந்து வந்தது. அந்தப் பண்ணை கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் அதிகாரத்துக்குள் வந்த பிறகு இந்தப் பதவியினை பால் பண்ணையிலிருந்து பால்வளத்துறைக்கு மாற்ற வேண்டுமென பால்வளத் துறை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்தார். அந்தப் பதவியினை பால்வளத் துறைக்கு மாற்றுவதற்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் சம்மதம் தெரிவித்தார். அரசின் உத்தரவு பெற்று பால்வளத்துறை ஆணையாளரால் இந்தப் பதவி நிரப்பப்படும். இராணிப்பேட்டையிலுள்ள நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு துணை இயக்குநர் பதவி காலியாக உள்ளது. இந்தத் துணை இயக்குநர் என்கிற பெயரினை ஆராய்ச்சி அலுவலர் என பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பதவியினை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. எஸ். சிவராமன்: துணை இயக்குநர் பதவி, உதவி இயக்குநர் பதவி நிரப்பப்படாமல் இருந்தால் அது எவ்வளவு காலமாக காலியாக இருந்தது? எப்போது நிரப்பப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கால்நடை அலுவலர், அரசு பாற்பண்ணை, மாதவரம் 1–7–79–ல் இருந்து நிரப்பப் படாமல் உள்ளது. துணை இயக்குநர் பதவி, இராணிப்பேட்டை 3–10–80–ல் இருந்து நிரப்பப்படாமல் உள்ளது. இயக்குநரின் ஆணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் நிரப்பப்படும்.

### திருநாகேஸ்வரம் பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவநிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 140—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் (I.C.D.P.) திட்டத்தின்கீழ் ஒரு கால்நடை மருத்துவநிலையம் அமைக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை,

(ஆ) இவ்வினா எழாது.

திரு. செ. இராமலிங்கம்: திருவிடைமருதூர் ஒன்றியத்தில் உள்ள திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துவ மனை அமைக்கவேண்டும் என்று மாவட்ட வளர்ச்சிமன்றக் குழுவிலிருந்து அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்கு எட்டு கிலோ தொலைவிற்குள் வேறு கால்நடை மருத்துவமனை இல்லை. எனவே, உடனடியாக மீண்டும் இதுகுறித்து பரிசீலனை செய்து அங்கே ஒரு